## ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை நேரம் வினா எண் 314
## தலைப்பு: இளைஞர்களின் மன குழப்பத்தை போக்குவது

**நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின்**
சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 118-123 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:
ஸ்வாமி எங்களுக்கு மிகவும் வருத்தத்தை கொடுக்கின்ற விஷயம் என்னவென்றால் பல வருடங்களாக உங்களைடைய தெய்வீக அருளுரைகளை திரும்ப திரும்ப கேட்டும் எங்கள் வாழ்க்கை முறையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.இதற்கான காரணம் என்ன என்பதை தாங்கள் தெளிவு படுத்த வேண்டும் ஸ்வாமி.மேலும் இதிலிருந்து விடுபடுவதற்கான வழியையும் கூறி அருளுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
அறிவுரைகளை நடைமுறை வாழ்கையில் நீங்கள் முறையாக கடைபிடிககாததே இதற்கு காரணமாகும்.
ஓர் இடத்தில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இருள் சூழ்ந்தால் வெறும் வாயால் விளக்கு என்று சொல்லிவிட்டால் அந்த இடத்தில் வெளிச்சம் வந்து விடுமா.
பசியுள்ள ஒரு மனிதனிடம் உணவு வகைகளின் பட்டியலை மட்டும் காண்பித்தால் அவன் பசி தீர்ந்து விடுமா.
உணவை சாப்பிட்டால் தானே அவன் பசி அடங்கும்.
ஒரு நோயாளி மருந்தை பற்றி வாயால் சொல்வதை கேட்டுக் கொண்டிருந்தால் மட்டும் அவன் நோய் குணமாகிவிடுமா.மருந்தை உட்கொண்டால் தானே நோய் குணமாகும்.
பொருளாதாரம் மற்றும் கணக்கியல் பற்றிய தகவல்களை கேட்பதால் மட்டும் ஒருவருடைய ஏழ்மை நீங்கி விடுமா.
அது போல் ஆன்மீக பயற்சி யில் ஈடுபடாமல் வெறும் கேள்வி ஞானத்தை கொண்டே முக்தி அடையமுடியுமா.
வெறும் வாயால் சொல்வதை விட்டு நடைமுறை படுத்த வேண்டும்.
அருளைரகளில் கேட்டவற்றை நடைமுறைபடுத்தும் வரை திரும்ப திரும்ப கேட்பதால் ஒரு பயனும் இல்லை.
தீப்பெட்டி ஈரமாக இருக்கும் போது அதில் திரும்ப திரும்ப தீக்குச்சியை உரசினால் நெருப்பை பற்ற வைக்க முடியாது. அந்த தீப்பெட்டியை சூரிய ஒளியில் காயவைக்க வேண்டும்.
அது போல் நீங்கள் உலகியலான இன்பங்களிலும் பந்தங்களிலும் மூழ்கியிருக்கும் வரை உங்களால் ஞானம் என்ற விளக்கை ஏற்ற முடியாது.
உலகியலான ஆசைகளை துறவு என்ற சூரிய வெளிச்சத்தில் காய வைக்க வேண்டும்.அது போல் எவ்வளவு தான் ஸ்வாமி யின் அருளுரைகளை திரும்ப திரும்ப கேட்டாலும் அதில் ஒன்றையாவது நடைமுறை படுத்தாதவரை ஒரு பயனும் இல்லை.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி எங்களின் எண்ணங்கள் திசை மாறி போகும் போது நாங்கள் விரக்தியும் வேதனையும் அடைகின்றோம்.
அதிலிருந்து விடுபட வழி கூறுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
உங்களின் இந்த ஏமாற்ற உணர்வுக்கும் மன அழுத்தத்திற்கும் விரக்திக்கும் நீங்கள் பிரச்சனைகளை தவறான முறையில் அணுகுவதுதான் காரணம்.எது நடந்தாலும் நன்மைக்கே என்றெண்ணி நீங்கள் செயல்பட வேண்டும்.
இதுவே நேர்மறையான சிந்தனை ஆகும். ஆன்மீக சாதகருக்கு இது மிகவும் அவசியமாகும்.அப்போது மட்டுமே நீங்கள் உண்மையான ஆனந்தத்தையும் பிரசாந்தியையும் அனுபவிக்க முடியும்.
மாணவர்களாகிய உங்களுக்கு நேர்மறையான சிந்தனை இருப்பதால் தான் உங்களால் பாடதிட்டப்படி பயின்று தேர்வுகளில் வெற்றிபெற முடிகிறது.
அவ்வாறு இல்லாமல் நாம் படிப்பது கொழுத்த சம்பளத்துடன் ஒரு வேலையை பெற்று வெளிநாடு சென்று பணக்கார பெண் ஒருவரை நல்ல வரதட்சிணையுடன் திருமணம் செய்யத்தான் என்று எண்ணினால் அது எதிர்மறை சிந்தனை யாகும்.
ஒரு மருத்துவர் நோயாளிக்கு மருந்து கொடுத்து குணபடுத்தினால் அது நேர்மறை யானது.ஆனால் அதன் மூலம் தன் சிகிச்சையை அதிக பணம் சம்பாதிக்க பயன்படுத்தினால் அது எதிர்மறையானது.இன்றைய உலகில் நீங்கள் உங்கள் எண்ணங்களை தெய்வீக சிந்தனை கொண்டதாக அமைத்து கொள்ள வேண்டும்.
அப்போதுதான் சத் சித் ஆனந்தமான தெய்வீக ஆனந்த்தை உங்களால் பெற முடியும்.
எனவே நீங்கள் எது நடந்தாலும் அது நன்மைக்கே என்று எடுத்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்து கொள்ள வேண்டும்.இந்த வகையான நேர்மறை சிந்தனை உங்களுக்கு கஷ்டங்களும் துன்பங்களும் நஷ்ட்டங்களும் அவமானங்களும் தோல்விகளும் ஏற்பட்டாலும் அவை எல்லாம் நன்மைக்கே என்று பின்நாட்களில் உங்களுக்கு உணர்த்தி விடும்

ஒரு அரசர் தன் கையாலேயே கரும்பை துண்டுகளாக வெட்டி சுவைக்க விரும்பினார். கரும்பை வெட்டும் போது தன் கை விரலை வெட்டி கொண்டார்.அருகிலிருந்த அமைச்சர் இது உங்கள் நன்மைக்கே என்றார்.அரசர் கோபம் கொண்டு நான் தலையை வெட்டி கொண்டால் அது வும் என் நன்மைகே என்று சொல்வீர்களா என கேட்டு அமைச்சரை சிறையில் அடைத்தார்.அப்போது அமைச்சர் இது எனது நன்மைக்கே என்றார்.
சிறிது நாட்கள் கழித்து அரசர் வேட்டையாடுவதற்கு காட்டிற்கு சென்ற போது காட்டுவாசிகளிடம் சிக்கி கொண்டார்.தங்கள் தெய்வத்திற்கு அரசரை பலியிட அவர்கள் பிடித்து சென்றனர்.அங்கே தலைமை பூசாரி அரசரை பரிசோதித்து விட்டு இவருக்கு ஒரு விரல் இல்லை.அதனால் இவர் தெய்வத்திற்கு பலியிட ஏற்ற மனிதர் இல்லை என்று சொல்ல அவர்கள் அரசரை விடுவித்து அனுப்பிவிட்டனர்.
அப்போது தான் அமைச்சர் சொன்னது உண்மை என அரசர் உணர்ந்தார்.

திரும்பி வந்தவுடன் அமைச்சரை அழைத்து நீங்கள் சொன்னது உண்மைதான்.
ஆனால் நான் உங்களை சிறையில் அடைக்கும் போது அது உங்களுக்கு நன்மை என்றீர்களே.அது எப்படி என கேட்டார்.
அமைச்சர் சொன்னார் அரசே நான் சிறையில் அடைக்கப்படாவிட்டால் உங்களுடன் காட்டுக்கு வந்திருப்பேன்.
அப்போது அவர்கள் என்னையும் பிடித்திருப்பார்கள்.என் கை விரல் வெட்டப்படாததால் அவர்கள் என்னை பலியிட்டிருப்பார்கள்.நல்லவேளை நான் உயிர் தப்பினேன்.இது என் நன்மைக்கே என்றார்.
இது போல் நேர்மறை சிந்தனை மற்றும் நடத்தையுடன் இருந்தால் வாழ்க்கையில் வெற்றியும் மகிழ்ச்சியும் கிடைக்கும்.
தெலுங்கு பாடல் ஒன்று பின்வருமாறு கூறுகிறது: தேவையான சமயத்தில் உதவிக்கு வராத உறவினரும்,போர்களத்திலே ஓடாமல் நின்று விடுகிற குதிரையும் தீவிரமாக பிரார்த்தனை செய்து வேண்டிகொண்ட பிறகும் அருள் செய்யாத தெய்வமும் உடனடியாக கைவிடபடவேண்டியவர்கள் என்று கூறுகிறது.இது உண்மை போல் தோன்றுகிறது அல்லவா.
இந்த பாடல் சுமதி என்பவரிடம் கூறப்படுகிறது.
இங்கே தேவையான நேரத்தில் உதவாத உறவினரை
கைவிட வேண்டும் என எதிர்மறையாக கூறும் அதே நேரத்தில் நீங்கள் அந்த உறவினருக்கு சரியான நேரத்தில் உதவியிருக்கிறீர்களா என்றும் எண்ணி பார்க்க வேண்டும்.
ஓடாத குதிரை போர்களத்தில் தேவை இல்லை தான்.ஆனால் அந்த குதிரையை சரிவர பராமரித்து தயார் நிலையில் நீங்கள் வைத்திருந்தீர்களா என்றும் பார்க்க வேண்டும்.
அது போலவே மனமுருகி
பிரார்தனை செய்த பிறகும் கோரிக்கையை கடவுள் நிறைவேற்றவில்லை என்று கோபம் கொள்ளும் அதே நேரத்தில் கடவுளின் அருளுக்கு நாம் தகுதி உடையவராக நன்நடத்தையுடன் இருக்கிறோமா என்பதையும் நீங்கள் சிந்திக்க வேண்டும்.

அந்த சுமதி என்பவர் மற்றவரிடத்தில் குற்றம் காணும் முன்பாக தன்னுடைய தகுதிகளை எண்ணிபார்ப்பவர்.
இதுவே நேர்மறை எண்ண ஓட்டமாகும்.
உங்களின் சிந்தனை ஓட்டமும் இது போல் நேர்மறையாக அமைய வேண்டும்.

அனைவருக்கும் நன்றி.
நம் ஸ்வாமியின் தித்திக்கும் தெய்வீக பேருரைகளை வர இருக்கும் காலங்களில் தொடர்ந்து அனுபவிப்போம்.
ஜெய் சாயிராம்.